# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01., இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | DFD/cir/2015/2 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2015-03-10 |

பொதுமுகாமையாளர் - இலங்கை வங்கி
பொதுமுகாமையாளர் - மக்கள் வங்கி
பொதுமுகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி
பொதுமுகாமையாளர் - பிரதேச அபிவிருத்தி வங்கி
பொதுமுகாமையாளர் - லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
பொதுமுகாமையாளர் - இலங்கை சேமிப்பு வங்கி
பொதுமுகாமையாளர் - வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி, இலங்கை

கனம் ஐயா/ அம்மணி

**<u>வரவு செலவுத் திட்டப்பிரேரணை 2015 அரச வங்கிகளின் நகை அடகு பிடித் தோருக்கான நிவாரணம் வழங்கள்.</u>**

நீங்கள் அறிந்ததற்கிணங்க, 2015 ம் ஆண்டு இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்டதற்கிணங்க வார்க்கைச் செலவு அதிகரித்தனால் அடகுபிடித்த நகைகளுக்கான வட்டிக் கொடுப்பனவுக்கு சலுகைகளை மக்களுக்கு வழங்குவதற்குத் தீர்மாணிக்கப்பட்டது. இதன்படி அனைத்து வங்கிகளும் கீழ்வரும் வழிகாட்டல்களுக்கமைய 2015 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ம் திகதியிலிருந்து செயற்படுமாறு வேண்டப் படுகின்றீர்கள்.

1. ரூபா 200,000/= வரை அரச வங்கிகளில் நகை அடகுபிடித்துப் பணம் பெற்ற தனி நபர்கள் அவர்களின் கணக்குகள் செயற்படாத கணக்குகளாக 2015 ஜனவரி 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாற்றப்பட் டிருந்தால், அவர்களுக்கும்.

2. ஒருவர் எத்தனை முறை அடகு பிடித்திருந்தாலும் ஆகக் கூடியளவு உச்ச தொகையான ரூபா 200,000/= வரை மட் டுமே இச்சலுகையினை அனுபவிக்க முடியும்.

3. ஒட்டு மொத்த அல்லது தனியான அடகு முற்பணம் ரூபா 200,000/= ஐ தாண்டி இச்சசலுகை உரித்துக்கு உற்பட மாட்டாது.

4. இச்சலுகை 2015-06-30 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் அடகு மீட்பின் போது மட்டுமே வழங்கப் படல் வேண்டும்.

5. நிலுவை தொகை மொத்தமாக அல்லது தவணைப்பணமாக மேற் குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தப்பட்டிருந்தால் மேலதிகமாக அறவிடப்பட்ட வட்டி அவர்களிடமிருந்து கழிக்கப்படல் வேண்டும். 12 வீதத்துக்கு மேலதிகமாக அறவிடப்பட்டவட்டி கழிக்கப்பட்டு வங்கிக்கான நட்டம் திறைசேரி ஊடாக வங்கிக்கு வழங்கப்படும்.

6. அடகுக்கான ஏனைய செலவுகள் வங்கியினால் பதிவழிக்கப்படுவதோடு அவை வங்கியினால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

7. வங்கிகளினால் பதிவளிக்கப்பட்ட வட்டித் தொகை ஒவ்வோரு மாதமும் வங்கியினால் கணக்கிடப்பட்டு அபிவிருத்தி நிதித் திணைக்களத்துக்கு வங்கியின் உள்ளகக் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். நிதி அமைச்சு உரிய தொகையை அடுத்த மாத முதற் கிழமைக்குள் உரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கும்.

8. தகவுடைய வாடிக்கையாளர்களுக்கு வங்கி தனிப்பட்ட முறையில் எழுத்து மூலம் இச்சலுகை விபரங்கள் பற்றி அறிவிக்க வேண்டும்.

9. மேற்படி விடயங்கள் தொடர்பானதொரு உள்ளகச் சுற்றுநிருபம் வங்கிகளினால் தம் கிளைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

10. 2015 ஜனும் 30 ம் திகதி வரை எந்தவொரு தகுதி உடைய வாடிக்கையாளரினாலும் சட்ட நடவடிக்கை எதுவும் மேற்கொள்ள முடியாது.

இது பற்றிய உங்களது. ஒத்துழைப்பை மெச்சுகிறேன்.

உங்கள் நம்பிக்கையுள்ள.

ஒப்பம் ;- கலாநிதி சமரதுங்க,

திறைசேரிச் செயலாளர் மற்றும்
நிதி அமைச்சின் செயலாளர்

பிரதி :

பணிப்பாளர் நாயகம் - வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
பணிப்பாளர் - வங்கி மேற்பார்வை, இலங்கை மத்திய வங்கி
} அ. கொ. பொ.